Tamil Nesan
20/07/2009
Page: 4
By: T.Subramaniam
Section: General News
Region: Malaysia Circulation: 45000
Type: Malaysia - Tamil Newspapers
Size: 247.00 sq.cms
Frequency: MTWTFS



## பையர் ஃபிளை நிறுவனத்தின் ஈப்போ-சிங்கப்பூர் விமானச் சேவை

# பேரா சுற்றுலாத் துறை துரித வளர்ச்சி பெறும்

(தி. சுப்பிரமணியம்)
ஈப்போ, ஜூலை 20-

ஈப்போ- சிங்கப்பூருக்கு நேரடி விமானச் சேவை தொடங்கியதன் வழி பேரா மாநிலத்தின் சுற்றுலாத்துறை மேலும் வளர்ச்சி அடையும் என்றும் புதிய முதலீட்டாளர்களைக் கவர வழிவகுக்கும் என்று மகளிர் சமூகநல சுற்றுலா மற்றும் பயனீட்டாளர் துறை ஆட்சிக்குழு தலைவர் டத்தோ ஹமிடா ஒஸ்மான் கூறினார்.

இங்குள்ள அஸ்லான் ஷா விமான நிலையத்தில் பையர் ஃபிளை நிறுவனத்தின் சிங்கப்பூருக்கான புதிய விமான சேவையை தொடக்கி வைத்தபோது அவர் அவ்வாறு கூறினார். மேலும் அவர் கூறுகையில் வாரத்திற்கு 4 முறை மேற்கொள்ளப்படும் இப்பயணத்திற்கு பல்வேறு தரப்பினரிடமிருந்து குறிப்பாக வியாபாரிகள், சுற்றுப்பயணிகள் மற்றும் சிங்கப்பூரில் வேலை செய்வோரிடமிருந்து ஆதரவு கிடைக்கும் என்று டத்தோ ஹாமிடா நம்பிக்கை தெரிவித்தார்.

கடந்த 2008ஆம் ஆண்டு பேரா மாநிலத்தில் முதலீடு செய்தவர்களில் 20 சதவீதத்தினர் சிங்கையைச் சேர்ந்தவர்கள் என்றும் அவர் கூறினார்.

பேரா மாநிலத்தில் பிரசித்திப் பெற்ற தோங் குகை மலை, சாம் போ தோங் சீனக்கோவில், கேலீஸ் காசல், பெல்டா சுங்கை கிளா சுடுநீர் குளம் போன்ற சுற்றுலாத் தலங்கள் சுற்றுப்பயணிகளை கவரும் வகையில் அமைந்துள்ளதால் அதிகமானோர் இம்மாநிலத்திற்கு வருகைபுரிந்து இச்சேவையை பயன்படுத்துவார்கள் என டத்தோ ஹாமிடா நம்பிக்கை கொண்டார்.

இந்த புதிய விமானச்சேவை அறிமுக தினத்தை யொட்டி வருகையாளர்களை கவரும் வகையில் அஸ்லான் ஷா விமான கார் நிறுத்தும் வளாகத்தில் அரசாங்க மற்றும் தனியார் இலாகாவினர் பல்வேறு வர்த் தக வாணிப கூடாரங்களும் மருத்துவ முகாம்களும் நடத்தினர்.




குடும்ப மற்றும் சமூக மேம்பாட்டு இலாகா நடத்திய மருத்துவ விளக்க கூட்டத்திற்கு வருகை தந்த டத்தோ ஹமிடா மற்றும் மாநில குடும்ப மற்றும் சமூக மேம்பாட்டு அதிகாரிகள்.




பத்திரிகையாளர் சந்திப்பில் டத்தோ ஹாமிடா, பையர் ஃபிளே நிறுவன அதிகாரி என்டி லியோங் மற்றும் மலேசிய ஏர்போட் தலைமை இயக்குநர் டான்ஸ்ரீ பாசீர் அகமட்.